## இலங்கை துறைமுக அதிகாரசபை

### பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01 **பதவி: பிரதிப் பிரதான பாதுகாப்பு முகாமையாளர் (சிரேஷ்ட முகாமைத்துவ இரண்டாம் மட்டம்) – SLM 2**

**POST OF DEPUTY CHIEF SECURITY MANAGER – (SENIOR LEVEL MANAGEMENT 2)**

(அ) **தகுதித்திறன்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பட்டம்.

**அத்துடன்**

**அனுபவம்:**

இலங்கை இராணுவத்தில் கர்னல் ஒருவராக / இலங்கை கடற்படையில் கெப்டன் ஒருவராக / இலங்கை விமானப் படையில் குழுக் கெப்டன் ஒருவராக / சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவராக ஐந்து (05) வருட முனைப்பான சேவை.

(ஆ) **சம்பளம்**

சம்பள வகையீடு : 3 : 2 SLM 2
ஆரம்பச் சம்பளம் : ரூ. 120,040 /=
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 2,155 /=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 216,500 /= அளவினதாக இருக்கும்.

**நலன்கள் : தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு எண்ணெய், மருத்துவம், தொலைபேசி / கையடக்கத் தொலைபேசி மற்றும் ஏனைய மேலதிக நலன்களுடன் அதிகாரசபையினால் பராமரிக்கப்படும் வாகனமொன்றும் வழங்கப்படும்.**

02 **பதவி: கடலக மாலுமி (சிரேஷ்ட முகாமைத்துவ மூன்றாம் மட்டம்) – SLM 3**

**POST OF MARINE PILOT – SENIOR LEVEL MANAGEMENT 3**

(அ) **தகுதித்திறன்:**

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கல அதிபர் (வரையறுக்கப்படாத) தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான தேர்ச்சிச் சான்றிதழ்.

**அத்துடன்**

**அனுபவம்:**

வெளிநாட்டு வணிக கப்பலொன்றில் கல அதிபரொருவராக ஒரு (01) வருட கடற் பயண அனுபவம்.

(ஆ) **சம்பளம்**

சம்பள வகையீடு : 3 : 3 (SLM 3)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 109,215 /=
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,945 /=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 204,500 /= அளவினதாக இருக்கும்.

03 **பதவி: உதவி சட்ட அலுவலர் (மத்திய முகாமைத்துவ இரண்டாம் மட்டம்) -MLM 2**
**POST OF ASSISTANT LAW OFFICER – ( MIDDLE LEVEL MANAGEMENT 2)**

**(அ) தகுதித்திறன்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட சட்டம் தொடர்பான பட்டத்தினையுடைய சட்டத்தரணியொருவராக இருத்தல்.

**அத்துடன்**

**அனுபவம்:**
அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சட்டத்தரணியொருவராக ஐந்து (05) வருட அனுபவம்.

**(ஆ) சம்பளம்**

| | | |
|---|---|---|
| சம்பள வகையீடு | : | 4 : 2 MLM 2 |
| ஆரம்பச் சம்பளம் | : | ரூ. 82,505 /= |
| வருடாந்த சம்பள ஏற்றம் | : | ரூ. 1,585 /= |

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ. 175,000 /= அளவினதாக இருக்கும்.

குறிப்பு : ஆங்கிலம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழியில் செயலாற்றுவதற்கு பிரசித்த நொத்தாரிசாக அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல்.

**வயதெல்லை : 45 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)**

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் **பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்), மனிதவளம் மற்றும் நிருவாகப் பகுதி – நிறைவேற்றுப் பிரிவு, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13"** என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக **2026.06.30** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **பதிவுத் தபாலில்** அனுப்பப்படுதல் வேண்டும். **விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.**

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்களை அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**